பாராயண

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

28

சென்னை திருவொற்றியூர்
கலைமகள் பதிப்பு
விலை பை 3] [1942

பாராயண

ஸ்ரீ சுந்தரமூர்த்திநாயனர்

தேவாரம்

திருவெண்ணெய்நல்லூர் பதிகம்

பண்-இந்தளம்

பித்தாபிறை சூடீபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத்
தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளா யினி
யல்லே னென லாமே. 1

காரூர் புனலெய் திக்கரை
கல்லித்திரைக் கையாற்

பாரூர் புகழெய்தித் திகழ்
பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர ருட்டுறை யு
ளாரூர னெம்பெருமாற் காளல்லே
னெனலாமே.

திருப்புகலூர்-பண்-கொல்லி

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையா ளரைப்பாடாதே
யெந்தைபுகலூர் பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங் கூறையு
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவலோக மாள்வதற்
கியாதுமை யுறவில்லையே. 3
செறுவினிற்செழுங் கமலமோங்கு
தென் புகலூர்மேவிய செல்வனை

நறவம்பூம் பொழில் நாவலூரன்
வனப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன் வன் றொண்டனூரன்
பாடிய பாடல் பத்திவைவல்லவர்
அறவனடி சென்று சேர்வதற்
கியாதுமை யுறவில்லையே. 4

திருக்கூடலையாற்றூர்-பண்-புறநீர்மை

வடிவுடை மழுவேந்தி
மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப்
புரிகுழலு மையோடுங்
கொடியணி நெடுமாடக்
கூடலை யாற்றூரி
லடிகளிவ்வழி போந்த
வதிசய மறியேனே. 5
கூடலையாற்றூரிற்கொடி
யிடையவளோடு

மாடலுகந்தானை யதிரய
மிதுவென்று
நாடியவின் றமிழால்
நாவலவூரன்சொற்
பாடல்கள் பத்தும்வல்லார்
தம்வினை பற்றறுமே. 6

திருப்பாண்டிக்கொடுமுடி

பண்-பழம்பஞ்சரம்

மற்றும் பற்றெனக் கின்றிநின் றிருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே. 7

கோணியபிறை சூடியைக்
கறையூரிற் பாண்டிக்கொடிமுடி
பேணியபெருமானைப் பிஞ்ஞகப்
பித்தனைப் பிறப்பில்லியைப்
பாணுலாவரி வண்டறை
கொன்றைத் தாரனைப்படம்
பாம்பரை நாணனைத்தொண்ட
னாரன்சொல்லிவை சொல்லு
வார்க்கில்லைத் துன்பமே. 8

திருக்கடவூர்மயானம்பண்பழம்பஞ்சுரம்
மருவார்கொன்றை மதிசூடி
மாணிக்கத்தின் மலைபோல
வருவார்விடை மால்மாதோடு
மகிழ்ந்துபூதப் படைசூழத்
திருமால் பிரமனிந்திரற்குந்
தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துப்
பெரிய பெருமானடிகளே. 6

மாடமல்குகடவூரில் மறையோ
ரேத்து மயானத்துப்
பிடைதீரவடியாருக் கருளும்
பெருமானடிகள் சீர்
நாடிநாவலா ரூரனம்பி
சொன்ன நற்றமிழ்கள்
பாடுமடியார் கேட்பார்
மேற்பாவமான பறையுமே. 10

திருக்கடவூர்-பண்-நட்டராகம்

பொடியார் மேனியனே
புரிநூலொரு பாற்பொருந்த
வடியார்மூவிலை வேல்வளர்
கங்கையின் மங்கையொடுங்
கடியார் கொன்றையனே
கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகே ளென்னமுதே
யெனக்கார் துணை நீயலதே. 11

காராரும் பொழில்சூழ்
கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஏராரும் மிறையைத்துணையா
வெழில்நாவலர் கோன்
ஆரூரன் னடியானடித்
தொண்டனு ரைத்ததமிழ்
பாரோரேத் தவல்லார்
பரலோகத்திருப்பாரே. 12

திருத்தொண்டத் தொகை பண்
கொல்லிக் கௌவாணம்

தில்லைவாழந் தணர்த
மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக்
குயவனார் க்கடியேன்
இல்லையே யென்னாதவியற்
பகைக்கு மடியேன்
இளையான் றன்குடிமாறனடி

யார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்
பொருளுக் கடியேன்
விரிபொழில் சூழ்குன்றையார்
விறன் மிண்டர்க் கடியே
னல்லிமென் முல்லையந்தார்
அமர் நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரிலம்
மானுக் காளே. 13

மன்னியசீர்மறை நாவனின்
றவூர்ப்பூசல்
வரிவளையாள் மானிக்கும்
நேசனுக்கு மடியேன்
றென்ன வனுயுலகாண்ட
செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப்
பாணனார்க் கடியே

னன்னவனா மன்னடியே
யடைத்திட்டாளையுட
விசைஞானி காதலன்றிரு
நாவலூர்க்கோ
னன்னவ னாரூரனடிமை
கேட்டுகப்பார்
ராரூரி லம்மானுக்
கன் பராவாரே. 14

திருவாரூர்-பண்-மழமபஞ்சுரம்

பத்திமையுமடிமை யையுங்கை
விடுவான் பாவியேன்
பொத்தினநோயது விதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினை மா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கே
னென்னாரூரிறைவனையே. 15

பேருரு மதகரியினுரி
யானைப் பெரியவர்தஞ்
சீருருந் திருவாரூர்ச்
சிவனடியே திறம்விரும்பி
யாரூரனடித் தொண்ட
னடியன்சொலக லிடத்தில்
ஊரூரனிவைவல்லா
ருலகவர்க்கு மேலாரே. 16

திருமழபாடி-பண்-நட்டராகம்

பொன்னார் மேனியனே
புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லால்
லினியாரை நினைக்கேனே.17

ஏரார் மும்புரமுமெரியச்
சிலைதொட்டவனை
வாரார் கொங்கையுடன்
மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன
ரூறனுரைத்ததமிழ்
பரோரேத் தவல்லார்
பரலோகத்தி ருப்பாரே. 18

திருப்புக்கொளியூர்-அவிநாசிபன்குறிஞ்சி

எற்றுன்மறக்கே னெழுமைக்கு
மெம்பெருமானையே
யுற்றுயென்றுன்னையே யுள்குகின்றே
னுணர்ந்துள்ளத்தாற்
புற்றுடர வாபுக்கொளி
யூரவிநாசியே
பற்றுகவாழ்வேன் பசுபதி
யேபர மேட்டியே. 19

நீரேறேறுநிமிர்புன் சடைநின்
மலமூர்த்தியைப்
போரேறேறியைப் புக்கொளி
யூரவிநாசியைக்
காரேறுகண்டனைத் தொண்டனு
ரூரன் கருதிய
சீரேறுபாடல்கள் செப்பவல்லார்க்
கில்லை துன்பமே. 20

திருக்கோளிலி-பண்-நட்டராகம்

நீளநினைந்தடியே னுமை
நித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாளவள்
வாடிவருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றே
னாளிலை யெம்பெருமானவை
யட்டித்தரப்பணியே. 21

கொல்லை வளம்புறவிற்றிருக்
கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந்
திருநாவல வூரனவ
னெல்லிடவாட்கள் வேண்டிநினைந்
தேத்தியபத்தும் வல்லார்
அல்லல்களைந் துலகினண்ட
வானுலகாள் பவரே. 22

திருப்பழமண்ணிப்படிக்கரை

பண்-நட்டராகம்.

முன்னவனெங்கள் பிரான்
முதல்கான் பரிதாய பிரான்
சென்னியி லெங்கள் பிரான்
திருநீலமிடற் றெம்பிரான்
மன்னிய வெங்கள் பிரான்
மறைநான்குங் கல்லா லிழற்கீழ்ப்

பன்னிய வெங்கள் பிரான்
பழமண்ணிப்படிக் கரையே. 23

பல்லுயிர்வாழுந் தெண்ணீர்ப்பழ
மண்ணிப் படிக்கரையை
யல்லியந் தாமரைத்தாரா
ரூரனுரைத்ததமிழ்
சொல்லுதல்கேட்டல் வல்லாரவர்க்குந்
தமர்க்குங் கிளைக்கு
மெல்லியநன் பகலுமிடா
கூருதலில்லை யன்பே. 24

திருக்காளத்தி - பண்-நட்டராகம்

சென்டாடும் விடையாய்சிவனே
யென்செழுஞ் சுடரே
வண்டாருங் குழலாளுமை
பாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங் கணநாத
னெங்காளத்தியா

யண்டாவுன்னை யல்லாலறிந்
தேத்தமாட்டேனே. 25

காராரும்பொழில்சூழ் கணநாத
னெங் காளத்தியு
வாராவின்ன முதையனி
நாவலாரூரன் சொன்ன
சீரூர்செந்தமிழ்கள் செப்புவார்
வினையாயின போய்ப்
பேராவின்னுலகம் பெறுவார்
பிழைப்பொன்றிலரே. 26

திருக்குருகாவூர் பண் நட்டராகம்

இத்தனையா மாற்றை
யறிந்திலேனெம் பெருமான்
பித்தரேயென் றும்மைப்
பேசுவார்பிற ரெல்லாம்
முத்தினை மணிதன்னை

மாணிக்கமுளைத் தெழுந்த
வித்தனே குருகாவூர்
வெள்ளடை நீயன்றே. 26

வளங்கனி பொழின்மல்
குவயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர்
வெள்ளடை யுறைவானை
யிளங்கிளை யாரூரன்
வனப்பகை யவளப்ப
னுளங்குளிர் தமிழ்மாலை
பத்தர்கட் குரையாமே. 27

முற்றிற்று

K. M. V. Press Tiruvottiyur Madras